# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

********

**முறையீட்டு மனு எண்.126/2018/பே**
**ஆணை நாள்: 19–11–2018**

**திரு A. குமாரசாமி,**
**9, மணிமேகலைத் தெரு,**
**சீனிவாச நகர்,**
**பீர்க்கன்கரணை,**
**சென்னை – 600 063.** -- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
பீர்க்கன்கரணை பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

**ஆணை.**

காஞ்சிபுரம் மாவட்டம், பீர்க்கன்கரணை, சீனிவாச நகர், மணிமேகலைத் தெரு எண்.9, என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஏ. குமாரசாமி, என்பவரின் 05.06.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 06.06.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.126/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

பீர்க்கன்கரணை பேரூராட்சி வளாகத்தில், தினசரி 10 மணி நேரம் இரண்டு குழாய்களின் மூலம் 48,000 லிட்டர் தண்ணீர் தனி நபர் மூலம் விரயமாக்கப்படுவதாகவும், இதில் 24,000 லிட்டர் தண்ணீர் விற்கப்படுவதாகவும், இதன் காரணமாக ஒரு கீலோ மீட்டர் சுற்றளவுள்ள வீடுகளின் ஆழ்துளைகிணறுகள் அனைத்தும் வற்றி தண்ணீர் இல்லாமல் போய்விட்டதாகவும், பேரூராட்சியின் தெருக்குழாய்களில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் சுமார் 15 நிமிடம் மட்டுமே குடிநீர் விடப்படுவதாகவும், இதனை ஆராய்ந்து தினமும் 48,000 லிட்டர் தண்ணீர் உறிஞ்சப்படுவது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். இம்முறைமன்ற நடுவ 12.06.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி, பீர்க்கன்கரணை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பீர்க்கன்கரணை பேரூராட்சி செயல் அலுவலரின் 29.06.2018 நாளிட்ட அறிக்கையில் காஞ்சிபுரம் மாவட்டம், பீர்க்கன்கரணை பேரூராட்சி 15 வார்டுகளையும், 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 25,871 மக்கள் தொகையினையும், தற்போது தோராயமாக 35,000 மக்கள் தொகையினை கொண்டதாக உள்ளதாகவும், பேரூராட்சியில் வசிக்கும் பொதுமக்களின் குடிநீர்த் தேவைக்கென ஐந்து இடங்களில் 22.40 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து, அதன் மூலம் நாளொன்றுக்கு 21.00 லட்சம் லிட்டர் தண்ணீர் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதாகவும், மேலும் குடிப்பதற்கான குடிநீர் உகந்த நீராக வழங்கிட ஏதுவாக எதிர்மறை சவ்வூடு பரவல் (RO Plant) மூலமாக (1) பேரூராட்சி அலுவலக வளாகம், (2) காமராஜ் நகர், வ.உ.சி தெரு மற்றும் (3) ஏரிக்கரை சாலை ஆகிய இடங்களில் நீர்த்தேக்கத் தொட்டி அருகில், குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் பொருத்தி குறைந்த விலையில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு குடிநீர் வழங்க பேரூராட்சி மன்ற தீர்மான எண்.363/2014, நாள்.31.10.2014 ன் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், M/s. Life Tell Pvt. Ltd, முடிச்சூர், சென்னை–48, என்ற நிறுவன கடித நாள்.16.10.2014ன்படி மேற்குறிப்பிட்டுள்ள மூன்று இடங்களிலும் அத்தொண்டு நிறுவனத்தின் மூலமே சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரங்கள் அமைத்துக் கொண்டும், அதன் பராமரிப்பு செலவு மற்றும் மின் கட்டணம் ஆகியவைகளை அத்தொண்டு நிறுவனம் மூலமே பொறுப்பேற்றுக் கொள்ளவும், இக்கட்டமைப்பிற்கு தேவையான இடம் மற்றும் தண்ணீர் மட்டும் பேரூராட்சியின் மூலம் இலவசமாக வழங்கப்படும் எனவும், அதன் மூலம் காலை மற்றும் மாலை வேளைகளில் பொதுமக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு 20 லிட்டர் குடிநீர் ரூ.10/– என்ற விலை விகிதத்தில் மட்டுமே விற்பனை செய்யப்படவேண்டும் எனற நிபந்தனைகளுடன் இத்தொண்டு நிறுவனத்தின் கடிதத்தின்படி, பீர்க்கன்கரணை பேரூராட்சி மன்ற தீர்மான எண்.411/2015 நாள்.27.02.2015 ன்படி, பேரூராட்சி கடித ந.க.எண்.283/2014/அ.1/நாள்.02.03.2015ல் நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பேரூராட்சி அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு 1.50 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் மூலம் நாளொன்றுக்கு தோராயமாக 16,000 லிட்டர் தண்ணீர் எதிர்மறை சவ்வூடு பரவல் தொட்டியில் நிரப்பப்பட்டு, அதிலிருந்து தோராயமாக 40 சதவீதம் சுத்தமான குடிநீரும், எஞ்சியுள்ள 60 சதவீதம் மறுபயன்பாட்டிற்கென பேரூராட்சி அலுவலகத்தின் உட்புறத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றில் விடப்படுவதாகவும், எனவே நாளொன்றுக்கு தோராயமாக 4,000 லிட்டர் குடிப்பதற்கு உகந்த குடிநீர் மட்டுமே பெறப்பட்டு விநியோகிக்கப்படுவதாகவும், இவ்வாறு ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் விநியோகிப்பதன் மூலம் பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என இதுநாள் வரை எவ்வித புகார்களும் பெறப்படாமல், மேற்காணும் முறையில் குடிப்பதற்கு உகந்த குடிநீர் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் தனது அறிக்கையில் பீர்க்கன்கரணை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளவாறு நாளொன்றுக்கு 48,000 லிட்டர் தண்ணீர் தனி நபர் மூலம் விரயமாக்கப்படுவதாகவும், 24,000 லிட்டர் தண்ணீர் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ள புகார்கள் ஆதாரமற்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 01.10.2018 நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 30.10.2018 அன்று

இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக, முறையீட்டு மனுதாரர் மற்றும் பீர்க்கன்கரணை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையிடப்பட்டது.

30.10.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.ஏ.குமாரசாமி, தனது வாக்குமூலத்தில், பீர்க்கன்கரணை பேரூராட்சி வளாகத்தில் தினசரி 10 மணி நேரம் இரண்டு குழாய்களில் சுமார் 48 ஆயிரம் லிட்டர் தண்ணீர் விரயம் செய்யப்படுவதாகவும், இதில் 24 ஆயிரம் லிட்டர் தண்ணீர் தனி நபரால் விற்பனை செய்யப்படுவதாகவும், இதன் காரணமாக ஒரு கிலோ மீட்டர் சுற்று வளாகத்தில் உள்ள வீடுகளில் ஆழ்துளை கிணறு அனைத்தும் தண்ணீர் இன்றி வறண்டு விட்டதாகவும், பேரூராட்சியால் பேணப்படும் தெருக் குழாய்களில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் சுமார் 15 நிமிடம் மட்டுமே தண்ணீர் விடப்படுவதாகவும், தற்போது 30 நிமிடத்தில் இருந்து ஒரு மணி நேரம் வரை தண்ணீர் வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். எனவே தினமும் 48 ஆயிரம் லிட்டர் தண்ணீர் உறிஞ்சி நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதை பாதுகாக்கும்படியும், Life tell private Ltd, என்ற நிறுவனத்திற்கு பேரூராட்சியின் மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் வழங்கியதாக தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் தான் கோரிய தகவலுக்கு பதில் அளித்துள்ளதாகவும், ஆனால் பேரூராட்சி ஒரு மன்றத் தீர்மானத்தின் மூலம் ஒரு தனி நபரை அனுமதிக்க அதிகாரம் உள்ளதா என்பது கேள்விக்குறியாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் தனக்கு அளிக்கப்பட்ட தகவலில் 4,000 லிட்டர் தண்ணீர் எடுப்பதாகவும் உறிஞ்சுவது 16,000 லிட்டர் என குறிப்பிட்டுள்ளதாகவும், காலை 5 மணி நேரமும், மாலை 5 மணி நேரமும் மோட்டார் வைத்து தண்ணீர் எடுக்கப்படுவதாகவும், சோதனை அடிப்படையில் 20 லிட்டர் நிறைவதற்கு ஒரு நிமிடம் ஆகும் எனவும், 600 நிமிடங்கள் மோட்டார் பயன்படுத்தப்படுவதாகவும், ஒரு நிமிடத்திற்கு இரண்டு குழாய்கள் மூலம் இரண்டு கேன்கள் நிரப்பப்படுகிறது எனவும், எனவே 24 ஆயிரம் லிட்டர் நீர் கேன்களில் நிரப்படுவது தனது கணிப்பு எனவும், 1,200 கேன் ஒரு நாளைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், ஒரு கேனின் விலை ரூ10/– எனவும், ஒரு நாளைக்கு 12 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகவும், ஒரு ஆண்டிற்கு தனி நபர் வருமானம் ரூ.43,20,000/– எனவும் ஆனால் பேரூராட்சி நிலம், நிலத்தின் நீரையும் இழப்பதைத் தவிர பேரூராட்சிக்கு எந்தவிதமான பயனும் இல்லை எனவும் பீர்க்கன்கரணை பேரூராட்சி பகுதியில் உள்ள ஏரிகளில் நீர் ஆதாரத்தை உருவாக்கி குடிநீர் விநியோகம் பேரூராட்சியே செய்யலாம் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இது போன்ற தனி நபர் நிறுவனங்களுக்கு பணி வழங்கும்போது விதிகளை கடைபிடித்து, விதிகளின்படி பேரூராட்சிக்கு வருவாய் வரும் வகையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, சட்டப்படி தீர்மானிக்கப்பட்டு செயல்படுத்தப்படவேண்டும் எனவும், செவி வழி செய்தியாக இந்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு மன்ற உறுப்பினருக்கும் தலா ரூ.5,000/– வழங்கப்பட்டுள்ளதாக அறிந்ததாகவும் தெரிவித்துள்ளார். அலுவலருக்கு இதில் தொடர்பு இருப்பதாக தனது கவனத்திற்கு வரவில்லை எனவும், தான் மனு போட்ட சில வாரங்களில் ஒரு 10 நாட்கள் Life tell நிறுவனத்தால் குடிநீர் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டு, அதற்கு பதிலாக காலை 12 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள tank மற்றும் மாலையில் 12 ஆயிரம் லிட்டர் tank கொண்டு வந்து அதே இடத்தில் நிறுத்தி ஏற்கனவே 10 ரூபாய்க்கு விற்று வந்த நிலையில் ரூ15/– க்கு தண்ணீரை விற்றார்கள் எனவும், பேரூராட்சி அலுவலகத்தில் போடப்பட்டுள்ள ஆழ்துளை கிணறை மட்டுமே வைத்து விவரம் தந்துள்ளதாகவும், இது போன்று இன்னும் இரண்டு இடங்களில் பணிகளும், பண வரவும் நடந்து வருவதாகவும், பெருங்களத்தூர் பேரூராட்சியிலும் இது போன்று குடிநீர் தனி நபர்களால் விற்கப்படுவதாகவும், தகவல் பெறும் சட்டத்தின் மூலம் நிலத்தடி நீர்

உறிஞ்சப்படுவதால் ஏற்படும் பாதிப்பு பற்றி பெறப்பட்ட புகார்கள் எத்தனை, பதிலளிக்கப்பட்ட புகார்கள் எத்தனை என்ற கேள்விக்கு எவ்வித புகார்களும் வரப்பெறவில்லை என்ற தகவல் தனக்கு அளிக்கப்பட்டதாகவும், ஆனால் 10.05.2018 தேதியிட்டு பீர்க்கன்கரணை நகர காங்கிரஸ் கமிட்டி விரைவுத் தபால் மூலம் 10.05.2018ல் பேரூராட்சி செயல் அலுவலருக்கு புகார் அளிக்கப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

30.10.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான, காஞ்சிபுரம் மாவட்டம், பீர்க்கன்கரணை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், தான் 01.12.2014 முதல் மற்றும் இடையில் சில மாதங்கள் தவிர பீர்க்கன்கரணை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், திரு.சுந்தர்ராஜ் மற்றும் திரு. குமாரசாமி ஆகியோருடைய மனு விவரம் தனக்கு தெரியும் எனவும், இது குறித்து 29.06.2018ல் ஒரு விரிவான அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும், 27.02.2015ல் மனுவில் குறிப்பிட்டுள்ள Life tell நிறுவனத்திற்கு 20 லிட்டர் குடிநீரை விற்பனை செய்ய தீர்மான எண். 415ன்படி அனுமதிக்கப்பட்டதாகவும், அதில் தண்ணீர் எடுக்கவும், மின் கட்டணத்தை அவர்களே கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டதாகவும், இந்த திட்டம் 2015 முதல் நடைபெறுவதாகவும் வேறு நபர்கள் யாரும் இதை செய்வதற்கு முன் வரவில்லை எனவும், பேரூராட்சி சார்பாக கிணறுகள் அமைத்து அந்த கிணறுகளே பேரூராட்சியின் குடிநீருக்கு நீர் ஆதாரங்களாக உள்ளதாகவும், பேரூராட்சியின் நீர் ஆதாரங்களில் இரும்பு, உலோகம், தாதுப் பொருட்கள் அதிகம் உள்ளதால், Life tell நிறுவனம் எதிர் சவ்வூடு முறையில் உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய தாதுக்களை அகற்றி குடிநீர் குறைந்த செலவில் தருவதாக ஒப்புக் கொண்டு அளித்த கடிதத்தின் அடிப்படையில் அப்போது இருந்த தலைவரின் ஒப்புதலின் பேரில் Life tell நிறுவனம் 02.02.2015 ல் ஒரு மனு அளித்து இது குறித்து 27.02.2015ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், இதில் 12வது வார்டு உறுப்பினரைத் தவிர்த்து தலைவர் மற்றும் 14 வார்டு உறுப்பினர்கள் இந்த தீர்மானத்தினை ஒப்புக் கொண்டதாகவும், 02.03.2015 அன்று இது குறித்து மேற்படி நிறுவனத்திற்கு உரிய பணி அனுமதி ஆணைகள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஒரு நாளைக்கு மேற்படி நிறுவனத்தாரால் 16 ஆயிரம் லிட்டர் தண்ணீர் மட்டும் உறிஞ்சப்படுவதாகவும், இதில் 40 சதவீதம் மட்டுமே குடிநீராக பயன்படுத்த முடியும் எனவும், மீதி 60 சதவீதம் மறு சுழற்சிக்கு விடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 01.12.2014 டிசம்பரில் தான் பணி ஏற்கும்போது அங்கு ஒரு செய்முறைக்காக Life tell நிறுவனத்தால் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு ஒரு காட்சி பொதுமக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாகவும், அதன் தொடர்ச்சியாகத்தான் மன்றப் பொருள் அமைந்துள்ளதாகவும், மன்றத் தீர்மானத்தில் ஏற்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு இந்த திட்டம் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இப்பேரூராட்சியில் திரு. வெங்கடேஷ் என்பவர் 54 நாட்களும், அதற்கு முன்பு திரு. சதீஷ் என்பவரும் செயல் அலுவலர்களாக இருந்ததாகவும், திரு.சதீஷ், என்பவர் தற்போது நாமக்கல் மாவட்டம், பட்டினம் பேரூராட்சியில் பணிபுரிவதாகவும் தெரிவித்துள்ளார். Life tell நிறுவனத்தின் உரிமையாளர் திரு.எவரெஸ்ட் என்பவர் ஆவார் எனவும், மேற்படி நிறுவனம் பேரூராட்சி அலுவலகத்தின் பக்கத்திலும், காமராஜர் வ.உ.சி தெருவிலும், ஏரிக்கரை பகுதி ஆக இந்த மூன்று இடத்திலும் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துள்ளதாகவும் இந்த நிறுவனம் குடிநீர் சுத்திகரிப்பை அங்கு நிறுவி செயல்படுத்துவதாகவும், பேரூராட்சி நிலம் அளித்தும் குடிநீர் எடுப்பதற்கு அனுமதியும் அளித்தும் எந்த கட்டணமும் மேற்படி நிறுவனம் பேரூராட்சிக்கு செலுத்துவதில்லை எனவும், மூன்று மாதத்திற்கு ஒரு முறை King Institute மூலம் சம்பந்தப்பட்ட Life tell நிறுவனத்தார் குடிநீர் மாதிரி நீரை பகுத்தாய்வு செய்து முடிவுகளை பேரூராட்சிக்கு

சமர்ப்பிப்பதாகவும், பேரூராட்சியின் சார்பாக 5 குடிநீர் ஆதாரங்கள் உள்ளதாகவும், இந்த ஐந்து நீர் ஆதாரங்களில் இருந்து இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் அனுப்பப்பட்டு சம்பந்தப்பட்ட பகுதிக்கு விநியோகம் செய்யப்படுவதாகவும், பேரூராட்சிக்குள் அமைக்கப்பட்டுள்ள தனியாருடைய குடிநீர் பகுப்பாய்வு செய்யும் இயந்திரம் ஒரு நாளைக்கு 16 ஆயிரம் லிட்டர் நிலத்தடி நீர் எடுப்பதாகவும் இது போன்று இன்னும் இரண்டு இடங்களில் நிறுவப்பட்டு இந்த இயந்திரம் ஏறத்தாழ அதே கொள்ளளவு அளவில் தண்ணீரை எடுக்கும் நிலையில் உள்ளதாகவும், ஆகமொத்தம் மூன்று பகுதிகளில் 48 ஆயிரம் லிட்டர் நிலத்தடி நீர் எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2011 ஆண்டின் மக்கட்தொகை கணக்கீட்டின்படி பீர்க்கன்கரணை பேரூராட்சியின் மக்கள் தொகை சுமார் 26,000 எனவும் இப்பேரூராட்சியில் 5 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு 22.40 லட்சம் லிட்டர் எனவும், இது போக Sintex தொட்டியிலும் நீர் நிரப்பப்பட்டு, ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 70 லிட்டர் நீர் வழங்குவதற்குரிய போதுமான ஆதாரங்களும் அதற்குரிய கட்டமைப்பு வசதிகளும் உள்ளதாகவும் தினமும் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமும் சில நேரங்களில் 2 மணி நேரமும் குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும், சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனம் எடுக்கக்கூடிய நீர் வடிகட்டி 40 சதவீதம் குடிக்கும் நீராக விற்பனைக்கு வருவதாகவும், மீதமுள்ள 60 சதவீதம் நீர் மீண்டும் நிலத்தடிக்கே செல்வதாகவும் தெரிவித்துள்ளார். மன்ற தீர்மானத்திலோ மற்றும் நடைமுறையிலோ ஒரு நாளைக்கு இத்தனை லிட்டர் நிலத்தடி நீர் எடுக்கவேண்டும் என்ற எந்த வரைமுறையும் வகுக்கப்படவில்லை எனவும், காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும், மாலையில் 5 மணி முதல் 10 மணி வரையிலும் நீர் எடுக்க அனுமதி உண்டு எனவும், எவ்வளவு நீர் எடுக்கிறார்கள் என்ற அளவு ஏதும் இல்லை எனவும், செயல்படும் நேரத்தை வைத்து உத்தேசமாக கணக்கிடப்படுவதாகவும், 10 நாட்கள் பராமரிப்பு பணிக்காக நீர் உறிஞ்சி அமைப்பு அந்த பணியினை நிறுத்தி வைத்ததாகவும், அந்த சமயத்தில் மாற்று தனியார் நிறுவனங்கள் குடிநீரை விற்றார்கள் எனவும், ஆனால் பேரூராட்சி அலுவலகத்தில் வைத்து யாரும் விற்கவில்லை எனவும், பெருங்களத்தூர் பேரூராட்சியில் பேரூராட்சி மூலமாகவே குடிநீருக்காக சுத்திகரிப்பு நிலையம் அமைத்து பராமரிப்பு மட்டும் தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பீர்க்கன்கரணை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, பீர்க்கன்கரணை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. இதில் பீர்க்கன்கரணை பேரூராட்சிக்கு சொந்தமான நிலத்தில், பேரூராட்சி மூலம் நிறுவப்பட்ட ஆழ்துளை கிணறு மூலம் தனியார் நிறுவனம் மூலம் குடிநீர் விற்பனை செய்ய பேரூராட்சி மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், மேற்படி இடத்தினை தனியார் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்ய அரசு விதிமுறைகளின்படி எந்தவிதமான நடைமுறைகளும் பின்பற்றப்படவில்லை என்பது பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூல பதிவின்படி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தனியார் நிறுவனம் பயனடையும் விதத்திலேயே மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எந்த அடிப்படையில் எவ்வித டெண்டரும் இல்லாமல், ஒரே ஒரு நிறுவனத்தினை மட்டும் பேரூராட்சி தீர்மானம் மூலம் அனுமதிக்கப்பட்டது என்பதற்கான எந்த விளக்கத்தினையும் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவிக்கவில்லை. பேரூராட்சிக்கு சொந்தமான இடத்தில் தனி நபர் மூலம் செயல்படுத்தப்படும் எந்த ஒரு தொழில் அனுமதி மூலமும் பேரூராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையிலேயே செயல்பட்டிருக்கவேண்டும். ஆனால் பீர்க்கன்கரணை பேரூராட்சி செயல் அலுவலர் இந்த

நடைமுறைகளை பின்பற்றாமலும், இத்தகைய ஒரு புதிதான, புதிரான நடைமுறை குறித்து பேரூராட்சிகளின் இயக்குநரின் ஆணையோ, அல்லது எந்த கருத்துருவும் அனுப்பி அனுமதி பெறப்படாத நிலை ஏற்புடையதல்ல. இவ்வாறு பேரூராட்சியின் இடம் தனியாருக்கு ஒதுக்கப்பட்டது, மற்றும் அவ்விடத்தில் ஆழ்துளை கிணறு மூலம் குடிநீர் எடுத்து விற்பனை செய்தல் போன்றவற்றின் மூலம் தனி நபர் பயனடைந்துள்ளது தெளிவாகிறது. ஆனால் இதன் அருகே உள்ள பெருங்களத்தூர் பேரூராட்சியில் தனி நபர் பயனடையாமல் பேரூராட்சியே இப்பணியை நேரடியாக செயல்படுத்துகிறது என்பதை இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும். இதன் மூலம் பேரூராட்சிக்கு எந்த ஒரு வருவாயும் ஏற்படுத்தப்படாததும், தனி நபர்/நிறுவனம் மட்டுமே பலனடைந்துள்ளதும் உறுதியாகிறது. இந்நடைமுறைகளுக்கு பேரூராட்சி செயல் அலுவலரின்உடன்பாடும் முக்கியக் காரணமாகும் என்பதை இம்முறைமன்ற நடுவம் சுட்டிக் காட்டுவதுடன் இவ்விதி மீறல்களுக்கு பொறுப்பான செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும், மேற்படி முறையற்ற செயல்பாடுகளை தடுத்திட தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக.

பெறுநர்

1.திரு. A. குமாரசாமி,
9, மணிமேகலைத் தெரு,
சீனிவாச நகர்,
பீர்க்கன்கரணை,
சென்னை – 600 063.

2.செயல் அலுவலர்,
பீர்க்கன்கரணை பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை –108.

4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சீபுரம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.